
# சிறுவர் அமுதம்

19.10.97

கிண்ணம்: 8 எண்ணம்: 10



## சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை.

## KINDERLITERARISCHES MAGAZIN

# கலைமகள் துதி



வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்,
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்,
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்!
உள்ளதாம் பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின்றொளிர்வாள்,
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள்!
செந்தமிழ்மணி நாட்டிடை யுள்ளீர்!

சேர்ந்திடத் தேவை வணங்குவம் வாரீர்!
வந்தனம் இவட்கே செய்வதென்றால்
வாழிய ஃதிங் கெளிதென்று கண்டீர்!
மந்திரத்தை முணுமுணுத்து ஏட்டை
வரிசையாக அடுக்கி அதன்மேல்
சந்தனத்தை மலரை இடுவோர்
சாத்திரம் இவள் பூசனை யன்றாம்!

வீடு தோறும் கலையின் விளக்கம்,
வீதி தோறும் இரண்டொரு பள்ளி,
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி,
தேடு கல்வியிலாத தொரு ஊரைத்
தீயினுக் கிரையாக மடுத்தல்,
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்!
-மகாகவி சுப்பிரமணியபாரதி-

யாரிடம் நீங்கள் பேசுகிறீர்களோ,அவருடைய உண்மை உணர்வுகளை அறிய விரும்பினால், அவனுடைய முகத்தைப் பார்த்துப் பேசுங்கள். மொழியை அவர் அடக்கி ஆளலாம். ஆனால் முகபாவத்தை அடக்கி ஆள்வது எளிதல்ல.
– செஸ்ட்டர் பீட் –

# வேதனை

மாணிக்கம் மீன்கள் பிடித்து விற்றுச் சீவித்து வரும் சிறு தொழிலாளி. ஒரு நாள் அவன் மீன் பிடிப்பதற்காகப் படகில் சென்று கொண்டிருந்த வேளையில், பலமாகக் காற்று வீசியது. காற்றில் அவன் சென்ற படகு அலைந்து வெகுதூரம் சென்று விட்டது. காற்று குறைந்ததும், மெதுவாகப் படகைச் செலுத்திக் கொண்டு கொண்டு வந்தான். ஆழம் குறைவாக இருந்த இடத்தில் வலையை வீசி மீன் பிடித்தான்.

மீன்களோடு மீனாக ஆழக் கடலில் வாழும் மீனும் அகப்பட்டது. அதைப் மாணிக்கம் வியப்புடன் பார்த்தான். "தகதக" என்று தங்க நிறச் செதில்களுடன் அது காணப்பட்டது. மீன்களும் பேசுமா?. ஆனால் அந்தத் தங்கமீன் பேசியது. "உனக்குக் கோடி புண்ணியம் உண்டு. நான் மீன்களின் தேவதை. நீருக்கு வெளியே வந்தால் இறந்து விடுவேன். என்னைத் தயவு செய்து விட்டுவிடு." என்றது. "உன்னை விட்டு விடுகிறேன். எனக்கு என்ன தருவாய்?" என்றான் மாணிக்கம்.

நீ, என்ன கேட்கின்றாயோ, அதைப் பெற்றுக் கொள்." என்றது தங்கமீன். மாணிக்கமோ, தங்கமீனைச் சோதித்துப் பார்க்க எண்ணினான். அவன் மீனிடம் "என் படகு நிறையத் தங்கம் வேண்டும். அதைத் தா." என்றான். உடனேயே


படகில் தங்கம் குவிந்தது. மீன் கேட்டுக் கொண்டது போல, அதனை விடுவித்தான். மீனும் மறைந்தது. ஆனால் மாணிக்கத்தின் படகு பாரம் தாங்காமல் நீரில் மூழ்கியது.

தங்கம் மட்டுமா, நீரில் மூழ்கியது. மாணிக்கத்தின் படகு கூட நீரில் மூழ்கி விட்டதே! படகோடு கவிழ்ந்த மாணிக்கம் நீந்திக் கரை சேர்ந்தான். இரண்டு நாட்களாக அவனைக் காணாத உறவினர்கள் அவனைக் கண்டதும் ஆரவாரமாக வரவேற்றனர். ஆனால் மாணிக்கம் தன்னைத் தானே நொந்து கொண்டான். அவன் வேதனை அவனுக்கல்லவா தெரியும்!.

**பெண்ணினம் எழுச்சி பெற்றாலன்றி மகத்தான சமுதாய மாறுதல் எதுவும் சாத்தியமில்லை. இது, வரலாறு சிறிதேனும் அறிந்தவர்களுக்குத் தெரியும். சமுதாய முன்னேற்றத்துக்குத் துல்லியமான அளவுகோல் கவர்ச்சி, அழகு, என்று அழைக்கப்படும் பெண்ணினம் (அழகற்றவர்களாக இருந்தாலும்) வகிக்கும் சமூகத் தகுதி நிலைதான்.**

**-கார்ல் மார்க்ஸ் -**

# வாஷிங்டன்



White House

எந்த மாகாணத்துக்கும் சொந்தமில்லாத நகரத்தை அறிந்திருக்கிறீர்களா?. உண்டு. அந்த நகரம் அமெரிக்கத் தலைநகரமாகிய வாஷிங்டன் நகரம் தான். (District of Columbia) என்று அழைக்கப் பட்ட போதும், வாஷிங்டன் எந்த மாகாணமும் உரிமை கொண்டாடக் கூடிய நகரம் அல்ல.

1790ம் மேஜர் பியரி சார்ல்ஸ் என்பவரால் வடிவமைக்கப்பட்ட

நகரமே வாஷிங்டன் நகரமாகும். அகலமான அழகான வீதிகள், வீதிகளின் பக்கங்களில் வரிசையாகக் காணப்படும் மரங்கள், ஏராளமான புல்வெளித் தரைகள், எல்லாம் செயற்கையாக வடிவமைப்புக் கொண்ட நகரம் இது.



அமெரிக்க ஜெனாதிபதியான ஜோர்ஜ் வாஷிங்டனின் பெயரைத் தாங்கி நிற்கும் இந்த நகரத்தில் நினைவுச் சின்னங்கள் பல இருக்கின்றன. அரசாங்க அலுவல்கள் ஏராளமாகச் செயற்படுகின்றன. தொழில் துறை மிகவும் குறைவு. உலகிலேயே பல்வேறு நாட்டு மக்களை சனத் தொகையாகக் கொண்ட நகரம் வாஷிங்டன் தான். அயல் நாட்டுத் தூதுவர்கள் வசிப்பதும் வாஷிங்டன் நகரில் தான்.

# சிங்கமும் நுளம்பும்



ஒருநாள் காட்டில் சிங்கம் ஒன்று வேட்டையாடிக் களைத்து விட்டது. ஒரு மரநிழலில் படுத்து நித்திரை செய்து கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு நுளம்பு சிங்கத்தின் காதில் கிணுகிணுத்தது. அதனால் சிங்கத்தின் நித்திரை குழம்பியது. கோபம் கொண்ட

சிங்கம், "ஏ! பார்ப்பதற்கு வெறுப்பூட்டும் நுளம்பே! தள்ளிப் போ." என்றது.

அதைக் கேட்ட நுளம்பு கோபமடைந்தது. "நான் மிகச் சிறிய அற்ப பிராணி. நீரோ! விலங்குகளுக்கெல்லாம் அரசன். உம்மிடம் தைரியம் இருந்தால், என்னுடன் சண்டைக்கு வாரும். உம்முடைய அரச பதவியை என் காலடியில் கொண்டு வந்து காட்டுகின்றேன். இதை நீர் ஏற்றுக் கொள்கிறீரா?." என்று கேட்டது. சிங்கம் இது என்ன! என் காலடித் தூசுக்குச் சமன் என்று எண்ணிச் சம்மதித்தது.

அவை சண்டையிட்டன. நுளம்பு தனது மென்மையான கூர்மையான கண்ணுக்குத் தெரியாத ஊசி போன்ற கொம்பினால், சிங்கத்தின் உடல் முழுவதும் குத்தியது. சிங்கத்துக்கு நுளம்பின் கிணுகிணுப்புச் சத்தம் மட்டுமே காதில் கேட்டது. அதன் உருவம் எங்கிருக்கிறது என்றே தெரியவில்லை. நுளம்போ சிங்கத்தைச் சுற்றிச்சுற்றி வலம் வந்து குத்தியது.

# குள்ள வாத்தின் குறிக்கோள்



குள்ள வாத்து நடக்கக் கோழி
குறுக்கே வந்தது - அதைக்
கொத்தித் துரத்திவிட்டு, வாத்து
நடந்து சென்றது.

பள்ளம் ஒன்றில் இறங்கத் தண்ணீர்ப்

பாம்பு வந்தது - வாத்து
'பாக்' எனக்கத்தப் பாம்பு
பயந்தே போனது.

தண்ணீர் இருக்கும் ஏரி நோக்கி
வாத்து நடக்கையில் - எதிரே
தவளை வர அதனைப் பிடித்து
விழுங்கி விட்டது.


பன்றி ஒன்று குறுக்கே வரவும்
பறந்த வாத்துத் தான் - கழுதைப்
பக்கம் செல்ல, அலறிக் கழுதை
கொட்டம் அடித்தது.

கன்று ஒன்றை நாய் தான் துரத்தி
ஓடி வந்தது - அதைக்
கண்டும் அஞ்சாத படியே வாத்து
ஏரியை அடைந்தது!

ஒன்றே குறியாய்க் கொண்டு விரைவாய்
நடந்து சென்றது - அன்று
ஒன்றா தடை? எனினும் தன்
குறிக்கோள் வென்றதே!

- முத்து.எத்திராசன் -

# மாங்காய்த் திருட்டு



திலீபன் நகரத்திலேயே பிறந்து வளர்ந்தவன். ஒரு முறை கல்லூரி விடுமுறையின் போது கிராமத்திலுள்ள பாட்டி வீட்டுக்கு வந்தான். கிராமத்தில் உள்ள சிறுவர்களுடன் அருகில் உள்ள மைதானத்தில் பந்து விளையாடுவது வழக்கம். ஒருநாள் பந்து விளையாடி விட்டுத் தோழர்களுடன் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

மாமரமொன்றில் மாங்காய்கள் தொங்கிக் கொண்டிருந்தன. மாங்காய் தின்ன ஆசையாக இருந்தது. பாலன் மாமரத்தில் ஏறி மாங்காய் பறித்தான். எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டனர். திலீபனுக்குத் திரும்பவும் மாங்காய் சாப்பிட ஆசையாக இருந்தது. பறித்துத் தரும்படி பாலனிடம் கேட்டான்.

"விரும்பினால் நீயே பறித்துக் கொள்." என்றான் பாலன். திரும்பவும் கெஞ்சிக் கேட்டான். பாலன் அவனை நையாண்டி செய்தான். பாலனுக்குக் கோபம் வந்தது.

"உனக்குத் தான் மரமேறத் தெரியுமா?. நானும் ஏறிக் காட்டுகின்றேன், பார்." என்று கூறி விட்டு, அதே வேகத்துடன் மரத்தில் ஏறிக் கொண்டான். காலில் சிராய்ப்பு ஏற்பட்டு இரத்தம் கசிந்தது. மரத்தில் ஏறி விட்டானே தவிர இறங்கத் தெரியவில்லை. கீழே நின்று கொண்டிருந்த நண்பர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தனர்.

"மெல்ல மெல்ல இறங்கு" என்றான் காசிம். நடுங்கிக் கொண்டே காலை மெல்ல வைத்துக் கொண்டு இறங்க முயற்சி செய்தான். கால் இடறி கீழே விழுந்தான் திலீபன்.

காலில் முறிவு ஏற்பட்டு வைத்தியசாலையில் இருக்க வேண்டி ஏற்பட்டது. பாட்டி திலீபனைப் பார்த்துப், "பேரா, தனக்கு இயலா வேலை தன் பிடரிக்குச் சேதம் என்று பழமொழி. மரமேறத் தெரியாத நீ ஏன் மரத்தில் ஏறிக் கொண்டாய்" என்று கேட்டார். திலீபன் வேதனையுடனும் சிரித்துக் கொண்டான்.

ஒட்டகத்தின் முதுகுப் பகுதியில் திமில் போன்ற மேட்டுப் பகுதி இருப்பதை அறிவீர்கள். இந்தப் பகுதியில் கொழுப்பு உணவுப் பொருட்கள் சேகரித்து வைக்கப் படுகின்றன. இரைப்பையில் மூன்று அறைகள் உள்ளன. ஒரு அறைக்குள் நீர் சேர்த்து வைக்கப்படுகின்றன. இதை விடவும், தசைகளிலும், இணைப்புத் திசக்களிலும் நீரைச் சேமித்து வைக்கும் தகவமைப்பு உள்ளது.

## வினாவிடைப்போட்டி:

1. இந்த ஸ்பெயின் ஓவியர் தன் வாழ்க்கையின் கூடிய காலத்தைப் பிரான்ஸ் நாட்டில் கழித்தார். (தற்போதைய தமிழ் சினிமாப் பாடல்களில் இவருடைய பெயர் அடிபடுவது உண்டு.)
பாலம், சீப்பு, குறளோவியம், பிணக்கு, அக்கா, பஸ்பம், ஸோபனம்.

2. "குரான்" வாசிப்பவர்கள் இந்த மதத்தைச் சேர்ந்தவர்கள்.
இமாலயம், வஸ்திரம், பலா, அச்சம்.

3. தனக்குத் தானே முடி சூட்டிக் கொண்ட மாவீரர் இவர்.
நெருப்பு, தப்பு, வாட்போர், மெல்லினம், ஐயம், கன்னம்.

4. 1847இல் இருந்து 1931ம் ஆண்டு வரை வாழ்ந்த அமெரிக்க விஞ்ஞானி 1000 கண்டு பிடிப்புகளுக்கு மேல் கண்டு பிடித்தார்-
தோற்றம், அவமதிப்பு, அஸ்தி, எதிர்ப்பு, பட்டி, சன்மானம், நல்லவன்.

5. தோமஸ் எடிஸனும், கிரஹம் பெல்லும் ஒரே சமயத்தில் கண்டு பிடித்த பொருள் இது,
தொழில், மழலை, பேகன், கஞ்சி.

முடிவு திகதி: 05.11.97

# சேக்கிழார்



சோழ நாட்டை அநபாயச் சோழன் ஆட்சி செய்தான். தமிழ்ப் பற்றுக் கொண்ட அவன் ஔவையின் செய்யுளால் கவரப்பட்டான். அந்தச் செய்யுளின் கருத்தை மனதில் பதித்துக் கொண்டான். பாடலில் தொண்டைநாடு சான்றோருக்குப் பெயர் பெற்றது என்று கருத்துப்படச் செய்யுள் காணப்பட்டது.

அதைச் சோதித்துப் பார்க்க எண்ணினான். மூன்று வினாக்களை எழுதி சேவகன் ஒருவனிடம் கொடுத்துத்

தொண்டை நாட்டு மன்னனுக்கு அனுப்பினான். அதில், "தொண்டைநாடு சான்றோர்கள் நிரம்பிய நாடுதானா?" என்றறிய விரும்புவதாகவும், குறிப்பிட்டு எழுதியிருந்தான். தொண்டைநாட்டு மன்னனுக்கோ மானப்பிரச்சனையாக இருந்தது. அரசசபையின் தலைமைப் புலவரான வெள்ளியங்கிரியாரை அழைத்தான். அவரிடம் அதற்கான பதிலைத் தரும்படி கூறினான்.

புலவர் தன் வீட்டுக்கு வந்து வினாக்களுக்குரிய விடைகளை ஆராய்ந்து கொண்டிருந்தார். மகனான அருள்மொழி தந்தையிடம் வந்திருந்த கேள்விகளைப் பார்த்தான்.

"உலகத்தை விடவும் பெரியது எது?
மலையை விட உயர்ந்தது எது?
கடலை விடவும் பெரியது எது?
"அப்பா, இதற்கான விடைகள் நம் தமிழ்வேதமாகிய திருக்குறளில் இருக்கின்றதே!

காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

ஒருவருக்குத் தேவையான காலத்தில் செய்த உதவி சிறியதாக இருந்தாலும் அது உலகத்தை விடவும் பெரியது.

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையிலும் மாணப் பெரிது"
எவ்வளவு பொருள், புகழ், செல்வம் வந்தபோதும் தன் நிலையில் நின்று அடக்கமாக வாழ்பவனின் வாழ்க்கை மலையை விடவும் உயர்ந்ததாகும்.

"பயன்தூக்கார் செய்த உதவி நலன் தூக்கின்
நன்மை கடலில் பெரிது"
இப்போது நான் செய்யும் உதவி எனக்குத் திரும்பவும் கிடைக்கும் என்று எண்ணாமல், செய்யப்படும் உதவி கடலை விடவும் பெரியது.

அருள்மொழியின் பதிலைக் கேட்ட புலவர் மகனை மார்புறத் தழுவி உச்சி முகர்ந்தார். பதில் தொண்டை மன்னன் மூலமாகச் அநபாயச் சோழனிடம் சென்றடைந்தது. தன்னுடைய வினாக்களுக்குரிய விடைகள் தொண்டை

மண்டல அரசனிடம் இருந்து கிடைத்ததை அறிந்து அநபாயச்சோழன் மகிழ்ச்சி கொண்டான். தன் வினாக்களுக்கு சரியான விடையளித்த அருண்மொழியை தன் நாட்டுக்கு அன்புடன் அழைத்தான்.

அருண்மொழிக்கு "உத்தமச்சோழப் பல்லவன்" என்று பட்டம் கொடுத்தான். தன் முதலமைச்சராகவும் அமர்த்திக் கொண்டான். அந்த அருண்மொழி தான் பெருமை பெற்ற பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர்புராணத்தை எழுதி "தொண்டர் சீர் பரவுவார்" என்னும் பட்டப் பேரைப் பெற்றார். சிறந்த அமைச்சராகவும் தொண்டாற்றி அரசனுக்கும், தமிழுக்கும் பெருமை சேர்த்தார். தான் பிறந்த கிழார்குடிக்கும் பெருமை சேர்த்தார். இதனால் சேக்கிழார் என்னும் புகழுக்குரிய பெயரைப் பெற்றார்.

கோழை, தன்னுடன் பலர் சேர வேண்டுமென்று விரும்புவான். வீரனோ, தனித்துப் போராடவே விரும்புவான்.

– மகாத்மா காந்தி –

## சொற்களைக் கண்டு பிடியுங்கள் முடிவு

இட—வலம்
சமை
சமையல்
மையல்
கணம்
தை
பசு
பசுமை
சுமை
கல்
கல்வி
வியப்பு
புரட்டு
சம்பவம்
கருணை
வாஞ்சை
சைனியம்
மலர்
தவி
குஞ்சம்
ஆவேசம்
வேசம்
மங்களம்
களம்

செயல்
பாடு
திக்கு

வல—இடம்

ஆசை
மையம்
கல்
வஞ்சனை
வில்
கணை
பாவம்
மடு

மேலி—கீழ்

சடை
பஞ்சம்
மையல்
செல்
வாக்கு
குடி
பாவி

சதி
ஆவல்
ஆட்டம்
சன்னி

கீழி—மேல்


செல்
செல்வம்
பகடை
கடை
வால்
பதவி
தவி
விதை
பா
பாகம்
குடம்
ஆசை

முடிவு:

| | |
|---|---|
| ♥விஜிதா விநாயகமூர்த்தி | Den mark |
| கௌரிசங்கர் சரவணபணன் | Solingen |
| தர்ஷன் சரவணபவன் | Solingen |
| மஞ்சுளா சிவசம்பு | Lohmar |
| ஜெயானந்தன் கண்ணன் | Berg.Gladbach |
| ஜெயமாலா இரத்தினசபாபதி | Eschelbronn |
| மோகன் இரத்தினசபாபதி | Eschelbronn |
| ஜெயதீபா இரத்தினசபாபதி | Eschelbronn |
| யூலியா.கி | Denmark |
| திவாகரன் ரவிக்குமார் | Denmark |

தாவர உணவை உண்ணும் விலங்குகளுக்குக் கோரைப் பற்கள் இருக்காது. எனவே, ஆடு, மாடு போன்ற பாலூட்டி விலங்குகளுக்குக் கோரைப் பற்கள் இருப்பதில்லை. அசை போடும் (இரை மீட்கும்) பழக்கம் கொண்ட இவைகளுக்கு பற்களின் அவசியம் இல்லை. பற்கள் இல்லாத மேல் மேல் தாடையின் இடைவெளியை "டையாஸ்டீம்" என்று அழைப்பார்கள்.

# ஆமையும் சிறுவனும்



ஆனந்தன் தன் மாமாவோடு ஆமைப் பண்ணைக்குப் போனான். அங்கு சிறிய ஆமைகளும் பெரிய ஆமைகளும் காணப்பட்டன. ஆமைக்குத் தான் கொண்டு வந்த பூக்களைப் போட்டான். ஆமை அவற்றைப் பார்த்தும் பாராமல் திரும்பியது. ஆனந்தனுக்கு ஏமாற்றமாக இருந்தது. அவன் மாமாவைப் பார்த்தான்.

மாமா அவனைப் பார்த்து, "அது கடல் ஆமை. அது பூச்சி,புழு,சிறியமீன் ஆகியவற்றை உணவாக உண்பவை. நில ஆமைகள் தான் தாவர உணவை உண்ணும். கடல் ஆமை உருவத்தில்

பெரியது. நில ஆமைகள் உருவத்தில் சிறியவை." என்றார்.

"மாமா, ஆமைகள் முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்குமாமே? நீங்கள் முட்டைகளைக் கண்டிருக்கிறீர்களா?" என்று கேட்டான். மாமா இல்லை என்றார் தலையை ஆட்டிக் கொண்டே. அப்போது அவர்கள் இருவரது பேச்சுக்களையும் கேட்டுக் கொண்டு நின்றிருந்த ஒருவர் ஆனந்தனைப் பார்த்து, "தம்பி, கார்த்திகை மாத நடுப்பகுதிகளின் பின், மார்கழி மாதத்திலும் ஆமைகள் முட்டை இடுகின்றன.

முட்டை இடுவதற்காக கடலில் இருந்து வெளியேறி வந்து கடற்கரையில் குழி தோண்டி முட்டைகள் இடுகின்றன. பின் குஞ்சுகள் 42 நாட்களில் இருந்து 77 நாட்கள் வரையுள்ள நாட்களில் குஞ்சுகள் பொரிக்கும். தாங்களாகவே கடலை நோக்கிச் சென்று விடும்." என்றார்.

மாமாவிடம் கேட்பதை விட, அவரிடமே தனது சந்தேகங்களைக் கேட்கலாம் என்று ஆனந்தன் எண்ணினான். ஆனால் அவரே மீண்டும் பேசத் தொடங்கினார். "ஆமைகளுக்குப் பற்கள் கிடையாது.

தடிப்பான தாடைகளின் மூலம் உணவை உண்கிறது. உணரும் தன்மை கூடுதல் சக்தி கொண்டது. தடிப்பான மேல் ஓட்டை சிறு தும்பால் தொட்டால் கூட தன் உடல் முழுவதையும் ஓட்டுக்குள் ஒளித்துக் கொண்டு விடும்.

ஓட்டில் உள்ள கோடுகளைக் கொண்டு ஆமைகளின் வயதைக் கணக்கிடலாம். விலங்கினங்களிலேயே அதிக ஆண்டுகள் உயிர் வாழ்பவை ஆமைகள் தான். முந்நூறு ஆண்டுகள் வரை ஆமைகள் உயிர் வாழும். மிகப் பழைய உயிரினங்களுள் ஆமையும் ஒன்றாகும். ஆமைகளின் மூதாதை இனம் பர்மியன் காலத்தைச் சேர்ந்த யூநாட்டோ சௌரஸ் (Eunotosaurus) என்று ஆராச்சியாளர்கள் கூறுகின்றார்கள்." என்றார்.

அவரைப் பார்த்துக் கொண்டும் சொன்னவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த மாமா அவரிடம், "ஆனந்தனுக்கு மட்டுமல்ல, எனக்குத் தெரியாதவை கூட உங்களிடம் இருந்து அறிந்து கொண்டேன்." என்று விடை பெற்றுக் கொண்டார். ஆனந்தனும் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு மாமாவுடன் வீட்டுக்குப் புறப்பட்டான்.

# கரும்பும் எறும்பும்



கட்டெறும்பு ஒன்று தான் வாழ்ந்த ஆலமரப் பொந்தில் இருந்து வெளியே வந்து பார்த்தது. அன்று சந்தை கூடும் நாள். கந்தன் கட்டுக் கட்டாகக் கரும்பு கொண்டு வந்து விற்பான். கரும்பு தின்னக் கூலி வேண்டுமா?. கட்டெறும்புக்குக் கொண்டாட்டம் தான்.

மனிதர்கள் எல்லாம் காசு கொடுத்து வாங்கும் கரும்பைத்

தான் இலவசமாகத் (திருடி) உண்பதில் எறும்புக்குப் பெருமை. கந்தனும் கரும்புக் கட்டுகளோடு வந்து சேர்ந்தான். கட்டெறும்பும் கரும்புக் கட்டுக்குள் புகுந்து கரும்பை விரும்பி உண்டது.

அதே வேளையில் கரும்புச் சாறு விற்பவன் கரும்பு வாங்க வந்தான். கரும்புக் கட்டுக்களை முழுவதும் விலை பேசி வாங்கிக் கொண்டான். எறும்புக்குத் தான் பிரயாணம் செய்வதே தெரியவில்லை. அவ்வளவுக்குக் கரும்பை உண்ட மயக்கத்தில் எறும்புக்கு எதுவுமே தெரியவில்லை.

கரும்பைப் பிழிந்து சாறு எடுக்கும் யந்திரத்துக்குள் கரும்புக் கட்டைத் தள்ளினான். "ஐயோ, பாவம்!" சக்கையோடு சக்கையாக எறும்பும் இறந்து விட்டது

# உதவி



அந்தத் தெருவிலேயே பெரிய வீடாக சம்பந்தனின் வீடு இருந்தது. தன் நான்கு குழந்தைகளோடும், அன்பான மனைவியோடும் அவர் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார். தொழில் சம்பந்தமாக அவர் வெளியூர் சென்று வருவார். ஒரு முறை சம்பந்தன் வெளியூருக்குச் சென்றிருந்த வேளை, கடைசி மகனான கார்த்திக்குக் காய்ச்சலாக இருந்தது. ஆறு மாதக் குழந்தையான அவனையும் மற்ற மூன்று குழந்தைகளையும் மனைவி ஒருத்தியாகவே கவனிக்க வேண்டி இருந்தது.

இரவு கார்த்திக்குக் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது. பேச்சு மூச்சில்லாமல் கிடந்தான். சம்பந்தனும் வீட்டில் இல்லை. சின்னக் குழந்தைகளோடு தாய் என்ன செய்வாள். அடுத்த வீடு, எதிர் வீடு என்று உதவி கேட்டுப் பார்த்தாள். எல்லோரும் உதவி செய்ய மறுத்து விட்டனர். உதவி கேட்டவண்ணமே, தெருவின் முனைவரை சென்று விட்டாள். தெருமுனையில் அப்பம் சுட்டு விற்கும் ஆச்சி தன் தொழிலை முடித்துக் கொண்டு தன் வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள்.

அடுத்தநாள் அப்பம் சுடுவதற்கு மா தயாரிக்கும் அவசரத்தில் புறப்பட்டுக் கொண்டிருந்த ஆச்சிக்கு கார்த்திக்கின் அம்மா உதவி கேட்டு அழுது கொண்டு நிற்பது தெரிந்தது. அவளிடம் சென்று அவளை ஆறுதல் படுத்தி வீட்டுக்கு அனுப்பி விட்டு, தன் தொழிலையும் பெரிது படுத்தாமல், இரவு நேரத்தையும் பொருட்படுத்தாமல் அடுத்த ஊரில் உள்ள பெண் வைத்தியரிடம் சென்று அவரை அழைத்து வந்து குழந்தைக்கு வைத்தியம் பார்த்தாள். குழந்தையும் கண் விழித்தான்.

அடுத்த இரண்டு நாட்களுக்குள் குழந்தை சுகமடைந்து விட்டான். சம்பந்தன் ஊருக்குத்

திரும்பியதும். மனைவி மூலம் அறிந்தார். மனைவியோடும் குழந்தைகளோடும் ஆச்சியிடம் வந்தார். நன்றிக் கடனாகச் சிறுதொகைப் பணமுடிச்சை ஆச்சியிடம் கொடுத்தார். ஆச்சி பணத்தைப் பெற மறுத்து விட்டாள். அவரைப் பார்த்து, 'தம்பி உதவி தேவையான போது உதவி செய்ய வேண்டும். தேவையில்லாமல் ஒருவரைச் சோம்பேறியாக்குவதற்கு உதவக்கூடாது. நீங்கள் தரும் இந்தத் தொகை என்னைச் சோம்பேறியாக்கி விடும். தேவையானபோது நான் பெற்றுக் கொள்கிறேன். குழந்தைகளைக் கவனித்துக் கொள்" என்று சிரித்துக் கொண்டே தன் வேலையைக் கவனித்துக் கொள்ளத் தொடங்கினாள். வறுமையில் வாழ்ந்த போதும் தன் சுயகௌரவத்தோடு வாழும் ஆச்சியை மனத்துள் வாழ்த்திக் கொண்டே சம்பந்தன் மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினார்.

பசி, பட்டினியை எதிர்த்துப் போராடும் போராட்டமே உண்மையில் மனிதனின் விமோசனப் போராட்டம் ஆகும்.

– ஜோன் கென்னடி –

## பாணும் பசியும்.



விவசாயி ஒருவன் தன் பயிருக்கு உரம் வாங்கப் பட்டினத்துக்கு வந்தான். உரம் வாங்கிக் கொண்டு திரும்ப எண்ணிய விவசாயிக்குப் பசி எடுத்தது.. ஏதாவது இலேசாகச் சாப்பிட்டு விட்டு, வீட்டுக்குச் சென்றால் சோறு சாப்பிடலாமே! என்று நினைத்துக் கொண்டான்.


அருகில் காணப்பட்ட உணவகத்துள் புகுந்தான். அங்கு இரண்டு துண்டு பாண் வாங்கிச் சாப்பிட்டான். பசி அடங்கவில்லை. மேலும் இரண்டு துண்டு பாண் வாங்கிச் சாப்பிட்டான். மூன்று நேரமும் சோற்றைச் சாப்பிட்டுப் பழகிய விவசாயிக்குப் பசி போனதாகவே தெரியவில்லை. மேலும் பசிப்பது போலப் பிரேமை உண்டாயிற்று.

எப்படியும் சோறு சாப்பிட வேண்டும் போல இருந்தது. உணவகத்தில் குறைந்த அளவில்,

ஒரு கரண்டி சோறும், அதற்கு அளவான கறியும் வாங்கிச் சாப்பிட்டான். அப்போது தான் அவனுக்குத் திருப்தியாகச் சாப்பிட்ட உணர்வு ஏற்பட்டது.

"பாணை என்ன என்று தான் பட்டணத்துச் சனங்கள் சாப்பிடுகின்றார்களோ! பாணுக்கு அடங்காத பசி, சோற்றைக் கண்டதும் பறந்து விட்டதே! என்ன ஆனாலும் சோறு சோறு தான். வீணாகப் பாணுக்கும் சேர்த்துக் காசு கொடுத்து விட்டேன். குறைந்த விலையில் சோற்றையே சாப்பிட்டிருக்கலாம். என்று சலித்துக் கொண்டான். விவசாயி முன்பு சாப்பிட பாண்துண்டுகளும் சேர்ந்தே பசியைப் போக்கியது என்பதை விவசாயி உணரவில்லை.

கறையானின் பிரதான உணவு மரத்தின் வேர்களிலுள்ள பட்டை, அல்லது மரப்பட்டை என்பது எல்லோருக்கும் தெரியும். நன்றாக வளர்ச்சி பெற்ற, இரண்டாவது நிலை வளர்ச்சி அடைந்த மரங்களைக் கறையான் அரிப்பது கிடையாது. அதாவது மரம் கடினத்தன்மை பெற்று விட்டால் கறையான்கள் அவ்விடத்தில் இருப்பதில்லை. நன்கு வளர்ச்சி அடைந்த தேக்கு, தேவதாரு, பாலை, முதிரை போன்றவற்றைக் கறையான்கள் தாக்குவதில்லை.




**NEKTAR FÜR KINDER**